**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.219/2021**
**Prosecution Witnesses : 6**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சரவணக்குமார்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **நாகராஜ்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(16.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது தாராபுரம் வட்டார போக்குவரத்து அவலுவலத்தில் மோ.வாகன ஆய்வாளர் நிலை1 ஆக பணியாற்றி வருகின்றேன். நான் இதற்கு முன்பு 10.07.2017 அன்று மதுரை மையம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோ.வா.நிலை 1 ஆக பணியாற்றிய போது கூடக்கோவில் காவல் நிலைய குற்ற எண். 128/2017 ன் படி விபத்தாய்வு சோதனை செய்ய வேண்டிய வாகனம் TN 59 AQ 3013 என்ற வாகனத்தை அன்றைய தினமே அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். அந்த ஆய்வின் போது வாகனத்தின் சேதாரங்கள் எதுவும் தென்படவில்லை. வாகனத்தின் கால்தடை திறன் 66 சதவிதமும் கைத்தடைகள் இயங்கும் நிலையில் காணப்பட்டது. இந்த விபத்து எந்தவித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்றும், நான் சான்றளித்தேன். **மோ.வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**. இல்லை